# இடைப்பாடி நகராட்சி

## 28.09.2022–ம் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள்1

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையில் கட்டப்பட்டுள்ள IGFF திட்ட கடை எண்.11க்கு நான்காவது முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 18.08.2022ந் தேதி கோரப்பட்டதில் மேற்படி கடை எண்.11க்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகள் பெறப்பட்டதன் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடையின் விபரம் | உச்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | உச்ச ஏலக்கேள்வி ரூ | உச்ச ஒப்பந்தப் புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வாரசந்தை IGFF திட்ட கடை எண்.11 | திரு.வீ.மணிகண்டன், த/பெ.வீரமணி, 46/23, கண்ணாரத்தெரு, இடைப்பாடி | – | 1700 |
| 2 | | திரு.எம்.தர்மேந்திரன், த/பெ.மாயவன், 48, பவானிரோடு மேற்குதெரு, இடைப்பாடி | – | 1500 |

அலுவலகுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) வாரசந்தை IGFF கடை எண்.11க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.1ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரிய திரு.வீ.மணிகண்டன் த/பெ.விரமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது. மேலும் இக்கடைக்கு நான்கு முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரியும் எவரும் முன்வரவில்லை. மேலும் இக்கடை அமைந்துள்ள பகுதியானது மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதால் கடையினை எடுத்த குத்தகைதாரர்கள் நகராட்சி வசம் கடையினை திருப்பி ஒப்படைத்து வருவதாலும் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதால் இவ்உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு 01.09.2022 முதல் கடையினை ஒப்படைப்பு செய்தமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.462/2018/பி4)**

| **தீர்மான எண்:191** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** | |

பொருள்2

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.8–யை ஏலம் விடப்பட்டு 31.07.2022 ந் தேதியுடன் முதல் மூன்றாண்டு காலம் முடிவடைய உள்ளதால் அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007–ன்படி தற்போதைய வாடகையில் இருந்து 15% சதவீதம் வாடகை உயர்வு செய்ய உள்ளதால் 01.08.2022 முதல் 31.07.2025 வரையிலான காலங்களுக்கு உரிமம் நீடித்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வ.வி.எண் | கடையின் விவரம் | குத்தகைதாரர் பெயர் | கடையினை ஒப்படைத்த தேதி | முதல் மூன்றாண்டு காலம் முடிவடையும் தேதி | தற்போது செலுத்தி வரும் வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 046/BD01/ 00073 | பேருந்து நிலைய IGFF திட்ட கடை எண்.8 | திருமதி வே.சரிதா | 01.08.2019 | 31.07.2022 | 18050 |

அலுவலககுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.07.2007ன்படி தெரிவித்துள்ளவாறு தற்போதைய வாடகையில் இருந்து 15% சதவீதம் வாடகை உயர்வு செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை தொகை உயர்வு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.751/2022/பி4)**

| **தீர்மான எண்:192** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அலுவலககுறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது** | |

பொருள்3

இடைப்பாடி நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு வாங்கப்பட்ட புதியதாக ஈப்பு வாகனத்திற்கு (Scorpio) நகர் மன்ற தீர்மானம் எண்.661, நாள்.25.01.2022ன் படி ரூ.18,00,000/- மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி புதிய வாகனம் பெறப்பட்ட தொகை ரூ.16,29,052/- மற்றும் காப்பீட்டு தொகை ரூ.52,531/- மொத்தம் ரூ.16,81,583/- போக மீதத் தொகை ரூ.1,18,417/- உள்ளது. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலர், சங்ககிரி அவர்கள் மூலம் பதிவு செய்ய, பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் சேவை வரி தொகையாக ரூ.3,03,526/- கேட்பு தொகையை ஆன்லைனில் திரு.எம்.சரவணன், ஸ்ரீ பெரிய பச்சியம்மன் ஆட்டோ கன்சல்டிங், சங்ககிரி மூலம் செலுத்த உள்ளதால், கேட்பு தொகை ரூ.3,03,526/-ல் மேற்காணும் மீதமுள்ள தொகை ரூ.1,18,417/- போக மீதத் தொகை ரூ.1,85,109/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.303/இ2/2022)**

| **தீர்மான எண்:193** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 4

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் குப்பைகள் அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis No.28369/J3 நாள் 04.12.2018-ன் படி தூய்மை பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் நியமித்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் தினகூலி நிர்ணயம் அடிப்படையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ409/- வீதமும் மேலும் ESI, EPF, Insurance, Uniforms, Safety Equipments மற்றும் Administrative Charges சேர்த்து சட்டபடியான விதிகளுக்குட்பட்டு 70 பணியாளர்களை தூய்மை பணி மேற்கொள்ள கடந்த 01.07.2021 முதல் 30.06.2022 வரை ஓராண்டிற்கு ரிலையான் பெசாலிட்டி சர்வீசஸ், சென்னை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டும், 01.07.2022 முதல் 30.09.2022 வரை மூன்று மாதகாலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது 30.09.2022-ம் தேதியுடன் மேற்படி பணிகாலம் முடிவடையவுள்ளதால், பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையாமல் இருக்க மேலும் 01.10.2022 முதல் 31.12.2022 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையிலும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு 70 பணியாளர்களை தூய்மை பணி செய்ய ரிலையான் பெசாலிட்டி சர்வீசஸ், சென்னை அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ35.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு -

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 37/ 2021 / எச்1)

| **தீர்மான எண்:194** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

**பொருள் 5**

இடைப்பாடி நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டம் JICA நிதி உதவியின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்பொழுது நகராட்சி வசம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மின் மோட்டார்களை இயக்கவும், பகிர்மான மற்றும் பிரதானக் குழாய்களை பராமரிக்கும் பணிக்கு ஆட்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலை விகிதத்தின் படி சப்ளை செய்யவும், குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் சப்ளை செய்து பராமரிக்கவும் 01.03.2022 முதல் 31.08.2022 வரை ஜஃரி எண்டர்பிரைசர்ஸ், ஒப்பந்ததாரர், சேலம் அவர்கள் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 31.08.2022வுடன் மேற்படி பணி உத்தரவு காலம் முடிவடைவதால் மேற்படி பணிக்கு ஆட்களை சப்ளை செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விகிதத்தின் படி சப்ளை செய்ய சம்மதித்து கடிதம் கொடுத்துள்ளதின் அடிப்படையில் மேற்படி ஒப்பந்த பணிக்காலத்தினை 01.09.2022 முதல் 31.10.2022 வரை 2 மாதஙகளுக்கு நீட்டித்தும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.

**(ந.க.எண்.225 /இ2/2021)**

| **தீர்மான எண்:195** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 6

இடைப்பாடி நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் பயன்பாட்டில் உள்ள கணிப்பொறி பிரிண்டர்களுக்கும், ஜெராக்ஸ் இயந்திரங்களுக்கும் தேவையான டோனர்கள் 2022-2023ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 939 /2022/இ2)**

| **தீர்மான எண்:196** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 7

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினிஆட்டோ வாகனம் TN52M9398ன் தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண் 875/2022/எச்1, நாள் 02.09.2022 ன்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 08.09.2022 ல் வரப்பெற்றது அதன்விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வாகனத்தின் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஓர்க்ஸ், சேலம். | மினிஆட்டோ வாகனம் TN52M9398ன் தகுதிசான்று பெற பழுதுகள் சரிசெய்தல் | ரூ58550/- |
| 2 | ஸ்ரீ S.S.P மோட்டார் ஓர்க்ஸ், சேலம். | | ரூ69800/- |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்பு ள்ளிகளில் வரிசை எண் 1-ல் காணும் ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஓர்க்ஸ், சேலம் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 875/2022/எச்1)**

| **தீர்மான எண்:197** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 8

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினிஆட்டோ வாகனம் TN52M8321ன் தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண் 875/2022/எச்1, நாள் 02.09.2022 ன்படி இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் 08.09.2022 ல் வரப்பெற்றது அதன்விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வாகனத்தின் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | மினிஆட்டோ வாகனம் TN52M8321ன் தகுதிசான்று பெற பழுதுகள் சரிசெய்தல் | ரூ64595/– |
| 2 | ஸ்ரீ S.S.P மோட்டார் ஒர்க்ஸ், சேலம். | | ரூ72850/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் காணும் ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 875/2022/எச்1)**

| **தீர்மான எண்:198** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 9

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினிஆட்டோ வாகனம் TN52M9381ன் தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண் 875/2022/எச்1, நாள் 02.09.2022 ன்படி இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் 08.09.2022 ல் வரப்பெற்றது அதன்விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வாகணத்தின் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி | மினிஆட்டோ வாகனம் TN52M8381ன் தகுதிசான்று பெற பழுதுகள் சரிசெய்தல் | ரூ49850/– |
| 2 | ஸ்ரீ குமரன்ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி | | ரூ53100/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் காணும் ஸ்ரீ முருகன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 875/2022/எச்1)**

| **தீர்மான எண்:199** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 10

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினிஆட்டோ வாகனம் TN52M8250ன் தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண் 875/2022/எச்1, நாள் 02.09.2022 ன்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 08.09.2022 ல் வரப்பெற்றது அதன்விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | வாகணத்தின் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி | மினிஆட்டோ வாகனம் TN52M8250ன் தகுதிசான்று பெற பழுதுகள் சரிசெய்தல் | ரூ53950/– |
| 2 | ஸ்ரீ குமரன்ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி | | ரூ65000/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் காணும் ஸ்ரீ முருகன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இடைப்பாடி என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 875/2022/எச்1)**

| **தீர்மான எண்:200** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்11

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கு ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022வரை பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வால்வு திருப்புனர் மற்றும் மேல்நிலை தொட்டிகளை இயக்கி பராமரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 14 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மதிப்பீடு ரூ.9,90,000/–ல் மேற்கொள்ள ந.ம.தீர்மானம் எண். 21, நாள்.31.03.2022ன் படி அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி ந.ம.தீர்மானம் எண். 20, நாள்.31.03.2022ன் படி M/S ஜெரி என்டர் பிரைசஸ், ஒப்பந்ததாரர், சேலம் அவர்களுக்கு பணி உத்திரவு 01.04.2022 அன்று வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஜுன் 2022 வரை மேற்கண்ட பணிக்கு ரூ8,35,420/– தொகையை செலவிடப்பட்டு மீதம் ரூ1,54,580 தொகை மட்டுமே இருப்பில் உள்ளது. எனவே ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்திற்கு தேவையான செலவு ரூ5,71,200 தொகையில், இருப்பில் உள்ள ரூ1,54,580 தொகை போக மீதம் தொகை ரூ.4.17 இலட்சத்திற்கும், மேலும், 31.08.2022வுடன் மேற்படி பணி உத்தரவு காலம் முடிவடைவதால் மேற்படி பணிக்காலத்தினை 01.09.2022 முதல் 31.10.2022 வரை 2 மாதங்களுக்கு நீட்டித்தும், பணி ஆட்களை சப்ளை செய்யும் ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5.70 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.9.87 இலட்சத்திற்கும், மன்ற அனுமதி பெற்று தொகை வழங்வும் மற்றும் பணி நீட்டித்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேறகண்ட செலவுத்தொகை ரூ.9.87/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் 01.09.2022 முதல் 31.10.2022 வரை கால நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 247/2022/இ1)**

| தீர்மான எண்:201 | நாள். 28.09.2022 |
|---|---|
| அனுமதிக்கப்பட்டது | |

பொருள்12

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதியில் திரு.எஸ்.ஆர்.பார்த்திபன், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் பணிகள் பரிந்துரைக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2022–2023ம் ஆண்டின் கீழ் உயர்கோபுர சோலார் தெருவிளக்குகள் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.1469/2022/அ2, நாள்.05.09.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.6,21, மற்றும் 22 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பூலாம்பட்டி ரோட்டில் காளியம்மன் கோவில் அருகில் உயர் கோபுர சோலார் தெரு விளக்கு அமைத்தல் | 5,40,000/– |
| 2 | இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.18 பஸ்நிலையம் அருகில் நஞ்சுண்ட ஈஸ்வரன் கோவில் அருகில் உயர் கோபுர சோலார் தெரு விளக்கு அமைத்தல். | 5,40,000/– |
| 3 | இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.9 நைனாம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உயர் கோபுர சோலார் தெரு விளக்கு அமைத்தல். | 5,40,000/– |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. மேற்காணும் பணிகள் திட்டப்பணி என்பதால் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2022–2023 திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்லாம்.

**(ந.க.எண்.713/22/இ2)**

| தீர்மான எண்:202 | நாள். 28.09.2022 |
|---|---|
| அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 13

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் JCB இயந்திரம் எண் TN52E 2066 (Excavator Loader) வாகனத்தின் ஜாயின்ட் ஸ்டார் பழுதடைந்து உள்ளது மற்றும் பக்கெட் கீர் கட்டர் 1 செட் மாற்ற வாகனம் பெறப்பட்ட சூர்யபாலா எர்த் மூவர்ஸ் நிறுவனத்தில் ஒப்படைத்து பணிகள் மேற்கொண்டமைக்கு பில் தொகை ரூ17128/– சூர்யபாலா எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கவும், மேற்படி இயந்திரத்தின் டயர்கள் மூன்று முறை பஞ்சர் ஒட்டியது மற்றும் இரண்டு முறை கம்பர்சர் ஒஸ் மாற்றியது மொத்தம் ரூ 4400/– திரு பெ.சுப்ரமணி ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் பாதிப்படையாமல் இருக்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1476/ 2020 / எச்1)**

| தீர்மான எண்:203 | நாள். 28.09.2022 |
|---|---|
| மன்றம் அனுமதிக்கப்பட்டது | |

பொருள்14

இடைப்பாடி நகராட்சி பகுதியில் தென்மேற்கு பருவமழை காரணமாக சரபங்கா நதியில் 08.09.2022 மதியம் 12.30 மணி முதல் வெள்ளநீர் அதிகரித்த வண்ணம் வந்துகொண்டிருந்தது. மேலும் வெள்ளநீரால் அடித்துவரப்பட்ட கோரைப்புல் மற்றும் ஆகாய தாமரை செடிகள் இடைப்பாடி பேருந்து நிலையம் அருகில் உள்ள பாலம், கவுண்டம்பட்டி பாலம் மற்றும் வெள்ளாண்டிவலசு பின்புறம் உள்ள பாலங்களில் வெள்ளநீரானது வெளியேராவண்ணம் அடைத்து கொண்டதன் காரணமாக அரசு மருத்துவமனை பின்புரம் உள்ள குடியிருப்பு பகுதிகளில் புகுந்து பெறும் சேதத்தை ஏற்படுத்தியது. மேலும் தொடர்ந்து வெள்ள நீரானது அதிகரித்ததால் அசம்பாவிதங்களை தடுக்கும் பொருட்டு பேரிடர் மீட்பு பணியாக போர் கால அடிப்படையில் மேற்படி பாலங்களில் அடைக்கப்பட்டிருந்த கோரைப்புல் மற்றும் ஆகாய தாமரை செடிகளை அகற்ற நகராட்சி வசம் உள்ள ஒரு JCB இயந்திம் மூலம் உடனடியாக அகற்ற இயலாத காரணத்தால் இடைப்பாடி நகர பகுதியில் உள்ள தனியார் நிருவனங்களான K.P.M எர்த் மூவர்ஸ் வீரப்பம்பாளையம் மற்றும் ஸ்ரீ ஜெயசக்தி எர்த் மூவர்ஸ் நைனாம்பட்டி ஆகிய நிறுவனங்களிடமிருந்து ஒரு செயின் டோசர் இரண்டு JCB இயந்திரங்கள் மற்றும் இரண்டு டிப்பர் லாரிகளை கொண்டு பாலங்களில் அடைத்துள்ள கோரைப்புல் மற்றும் ஆகாய தாமரை செடிகள் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டது. மேற்படி பணிகளுக்கு K.P.M எர்த் மூவர்ஸ் வீரப்பம்பாளையம் அவர்களுக்கு ஒரு மணிக்கு ரூ1200 வீதம் (18x1200) ரூ 21600/– மற்றும் ஸ்ரீ ஜெயசக்தி எர்த் மூவர்ஸ் நைனாம்பட்டி அவர்களுக்கு ஒரு மணிக்கு ரூ1000 வீதம் (9x1000) ரூ 9000/– வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், போர் கால அடிப்படையில் பேரிடர் மீட்பு பணியாக மேற்படி நிறுவனங்களுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் 954/ 2022 / எச்1)**

| தீர்மான எண்:204 | நாள். 28.09.2022 |
|---|---|
| மன்றம் அனுமதிக்கப்பட்டது | |

பொருள்15

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கான கட்டணம் ரூ20160/- அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜன்சிஸ் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க. எண் 2399/2014/அ2)**

| தீர்மான எண்:205 | நாள். 28.09.2022 |
|---|---|
| மன்றம் அனுமதிக்கப்பட்டது | |

பொருள்16

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் பொதுமக்களின் பயண்பாட்டில் அமைந்துள்ள கைபம்ப் (Hand Pump) மற்றும் மின்விசை பம்ப் (Mini Power Pump) அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால் 2022–2023 ஆம் ஆண்டிற்கு கைபம்ப் மற்றும் மின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உபரி பொருட்கள் கொண்டு சரி செய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.5,00,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 904/2022/இ1)**

| **தீர்மான எண்:206** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்17

இந்நகராட்சிக்குட்பட்ட வீட்டுவசதி வாரியம் நீரேற்று நிலையம் (Housing Board Boosting Station) மற்றும் பூலாம்பட்டி சாலையில் தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி (GLR Boosting Station) ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி குளோரின் அமைப்புகள் செயல்பட தேவைப்படும் திரவ குளோரின் (Sodium Hypo-Chlorine Liquid) 2022–2023ம் ஆண்டிற்கு முதல் பகுதியாக கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ளவும் மற்றும் அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.5,00,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 905/2022/இ1)**

| **தீர்மான எண்:207** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்18

இடைப்பாடி நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்ட புதிய ஈப்பு வாகனம் எண்.TN52AB2075க்கு(Scorpio) ஹாரன், லைட் போர்டு மற்றும் இதர பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.867/2022/இ2)**

| **தீர்மான எண்:208** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்19

மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.145/செ.ம.தொ.அ/2022, நாள்.27.06.2022ன் படி, இடைப்பாடி நகராட்சியில் 2021–2022ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளின் விபரங்களை தமிழ்முரசு நாளிதழ் சுகந்திர தினம் சிறப்பு தொழில் மலர்–2022ல் விளம்பரம் செய்தமைக்கு செலவு தொகை ரூ.11,550/–யை தமிழ்முரசு நாளிதழ் (Kal Publications Pvt.Ltd) நிறுவனத்தின் பட்டியல் எண். 3300368015, நாள்.12.08.22ன் படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.298/2020/இ2)**

| **தீர்மான எண்:209** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** | |

பொருள் 20

இடைப்பாடி நகராட்சியின் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணை தலைவர் மற்றும் அனைத்து வார்டு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை தயார் செய்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.

**(ந.க.எண்.999/2022/இ2)**

| **தீர்மான எண்:210** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** | |

பொருள்21

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.3582/22/பி1, நாள்.02.08.2022ன் படி சேலம் மாவட்டத்தில் அரசுப் பொருட்காட்சி 2022க்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படி சேலம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் சார்பாக M/s. Vadapalani Arts, Chennai அவர்கள் மூலம் அரசுப் பொருட்காட்சியில் அரங்கு அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (ப) எண்.104, தமிழ் வளர்ச்சி மற்றும் விழாத்துறை நாள்.22.07.2022ன் படி ரூ.70,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக ஏற்பட்டுள்ள செலவு தொகை ரூ.70,000/–இடைப்பாடி நகராட்சியன் பொது நிதியிலிருந்து M/s. Vadapalani Arts, Chennai அவர்களுக்கு வழங்குமாறும், தொகை ரூ.70000/–யை ஆத்தூர், மேட்டூர், நரசிங்கபுரம், தாரமங்கலம் மற்றும் இடங்கணசாலை நகராட்சி ஆணையர்கள் தங்களுக்குண்டான பங்கு தொகையாக ரூ.11,670/– இடைப்பாடி நகராட்சிக்கு வழங்குமாறும் தெரிவிக்கபட்டுள்ளது.

எனவே, மேற்காணும் தொகை ரூ.70,000/–யை செலுத்த மன்றத்தின் அனுமிதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் செலவுத் தொகையை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.146/2022/இ2)**

| **தீர்மான எண்:211** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **மன்றம் அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்22

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.21 தாவாந்தெரு காட்டுவளவு செல்லும் சாலையின் (ரத்தின சாமி மருத்துவமனை அருகில்) இடது புறம் உள்ள மழைநீர் வடிகால் வசதியுடன் மேல்பகுதி மூடப்படாமல் பொதுமக்களின் போக்குவரத்துக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் உள்ளதால் அதில் உடனடியாக Concrate Slab அமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மேற்காணும் இடத்தை நேராய்வு செய்யப்பட்டதில் தாவந்தெரு காட்டுவலவு செல்லும் சாலையில் இடதுபுறம் உள்ள மழைநீர் வடிகாலின் மேல்பகுதி மூடப்படாமல் வாகனங்கள் கீழே விழும் நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட மழைநீர் வடிகால் மேல்பகுதியில் Concrate Slab அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.38,000/—க்கு மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்காணும் பணியை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 939/2022/இ2)**

| **தீர்மான எண்:212** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அனுமதிக்கப்பட்டது** | |

பொருள்23

இடைப்பாடி நகராட்சியில் மனித கழிவுகளை சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்க தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தின் அனுமதியுடன் (CTE) நிறுவப்பட்டு, தற்பொழுது அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் (Trail Run) நடைபெற்று வருகிறது. மேலும், இச்சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாசுகட்டுபாட்டு வாரியத்தின் Consent of Operate (CTO) அனுமதி பெற வேண்டிய நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் உள்ள PH, BOD, COD மற்றும் TDS அளவுகளின் (Parameters) நிலை பொருத்து கழிவு நீர் வெளியேற்றும் நிலையில், மேற்காணும் அளவுகளின் விபரமும் மாசுகட்டுபாட்டு வாரியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட அளவுமானிகளில் கண்காணித்து இந்நகராட்சி மூலம் கழிவு நீர் வெளியேற்ற

ஏதுவாக புதியதாக PH மற்றும் TDS இயந்திரங்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.35,000/—க்கு மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்காணும் பணியை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1178 /2018/இ2)**

| **தீர்மான எண்:213** | **நாள். 28.09.2022** |
|---|---|
| **அனுமதிக்கப்பட்டது** | |

பொருள் 24

வட்டாச்சியர், இடைப்பாடி அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறைகள் ந.க.எண்.3922/2022/அ6, நாள்.16.09.2022ன் படி சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் அரசு நிலங்களை மீட்டு பாதுகாப்பதற்கு இந்நகராட்சிக்குட்பட்ட வருவாய் பிரிவுக்கு சொந்தமான ஆவணிப் பேரூர் மேல்முகம் கிராமம் சர்வே எண்.438/8 பரப்பு 0.88.0 ஹெக்டர் வகைபாடு கல்லாங்குத்து மற்றும் எடப்பாடி கிராமம் சர்வே எண்.62/5, பரப்பு 0.67.0 ஹெக்டர் வகைபாடு தோப்பு ஆகியவற்றின் எல்லைகளில் கம்பி வேலிகள் அமைத்து பாதுகாக்க கீழ்காண்ட பணிகளுக்கு இடைப்பாடி நகராட். மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும். பதிவுக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Providing Cut stone Piller with Barbed wire fencing at ward-C, Block-6, TS No.11/15 (Old Survey No.438-8) at ward.23, Avaniporur Melmugam in Idappadi Municipality | ரூ.3,90,000/– |
| 2. | Providing Cut stone Piller wire fencing at ward-D, Block-3, TS No.12 (Old Survey No.62/5) at ward.23, Alachampalayam Kattur in Idappadi Municipality | ரூ.4,00,000/– |
| | Total | ரூ.7,90,000/– |

அலுவலககுறிப்பு - மன்றம் பதிவுசெய்யலாம்.

**(ந.க.எண். 954/2022/இ2)**

| தீர்மான எண்:214 | நாள். 28.09.2022 |
|---|---|
| **மன்றம் பதிவுசெய்யப்பட்டது** | |

பொருள் 25

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மின்விளக்குகளை பராமரிக்க தேவைப்படும் கீழ்கண்ட மின் உதிரிப் பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 300 எண்ணிக்கை |
| 2. | 40 வாட்ஸ் ஸ்டாட்டர் | 300 எண்ணிக்கை |
| 3. | 36 வாட்ஸ் சி.எப்.எல் பல்பு | 175 எண்ணிக்கை |
| 4. | 36 வாட்ஸ் எலக்ட்ரானிக்ஸ் சோக் | 150 எண்ணிக்கை |
| 5. | அலுமினியம் ஒயர் | 6 காயில் |

மேலும் பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்ற அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்

**(ந.க.எண்.902/2022/இ1)**

